தினமணி

# பயறு வகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தைச் சேர்ந்த பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மைப் பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு, விருதுநகர் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அ. பூவலிங்கம் தலைமை வகித்தார். ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கா. பாஸ்கரராஜ் முன்னிலை வகித்தார்.

பயிற்சியில், விரிவாக்க சீரமைப்புத் திட்டப் பணி செயல்பாடுகள், மத்திய அரசு திட்டங்கள் மற்றும் பயறு சாகுபடியில் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கப்பட்டன.

ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய உழவியல் துறை உதவிப் பேராசிரியை செல்வி ரமேஷ், விவசாயிகளுக்கு பயறு சாகுபடி பற்றிய உழவியல் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். நோயியல் துறைப் பேராசிரியை விமலா, பயறு சாகுபடியில் நோய் மற்றும் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் விக்னேஷ் மற்றும் சுரேஷ் செய்திருந்தனர். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் பு. ஜோதிமஞ்சுளா நன்றி கூறினார்.

**வெற்றிலை உற்பத்தி வீழ்ச்சி – விலையேற்றம்**

வெற்றிலை பயிர்களை நோய் தாக்கியுள்ளதால் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதோடு, விலையும் ஏற்றம் கண்டுள்ளது. திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் முதல் அனைத்து நிகழ்ச்சியிலும், கோயில்களிலும் வெற்றிலை முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது.



தாம்பூலம் தரிப்பதற்கு வெற்றிலையே பிரதானமானது. வெற்றிலை இல்லாத நிகழ்ச்சிகள் இல்லை. வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர், குடியாத்தம், அணைக்கட்டு வட்டங்களில் வெங்கிளி, ஜமீன், குளிதிகை, கீழ்முருங்கை, தோட்டாளம், மாதனூர், ராசம்பட்டி, இதயாத்பூர், பசுமாத்தூர், வெட்டுவானம், சின்னச்சேரி, அகரம்சேரி, நரியம்பட்டு, சாத்தம்பாக்கம், பனங்காட்டூர், ரெட்டிமாங்குப்பம், ராஜக்கல், எம்.வி.குப்பம், நாவிதம்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.

வெற்றிலை பயிரிடும் முன், நிலத்தை மூன்று முறை எருவிட்டு ஏர் உழவு சால் ஓட்ட வேண்டும். பின்னர் 8 முழம் (1 மார்) கொண்ட அளவீடுகள் அடிப்படையில் ஏக்கருக்கு 1000 மார் கிடங்கு வெட்டவேண்டும்.

ஏக்கர் ஒன்றுக்கு 30 கிலோ அகத்தி விதையை வாங்கி நட வேண்டும். அதன் பின்னர் புங்கம் புண்ணாக்கு ஒரு முறையும் பின்னர் டிஏபி உரம் வைத்து மண் அணைக்க வேண்டும்.

வெற்றிலை கொடி போடுதல், களையெடுத்தல், மூங்கில் கழிகளை உட்டம் கட்டுதல், மருந்து தெளித்தல் என ஒரு ஏக்கர் வெற்றிலை பயிருக்கு ரூ.6 லட்சம் வரை செலவாகிறது. பயிரிட்ட ஓராண்டு வரை பக்குவப்படுத்துதல், சீர்படுத்துதல் பணிகள் மட்டும் நடைபெறும். முதல் ஆண்டில் அறுவடை செய்யமுடியாததால் எந்த வருமானமும் கிடைக்காது.

ஓராண்டுக்கு பிறகு, மாதம் ஒரு முறை வெற்றிலை அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் 25 பிண்டி முதல் 30 பிண்டி வரை விளைச்சல் கிடைக்கும். பிண்டி என்பது 70 கவுளி முதல் 80 கவுளி வரை கொண்டது. ஒரு கவுளியில் 80 வெற்றிலை முதல் 100 வெற்றிலை வரை இருக்கும். ஒரு ஏக்கரில் பயிரிடப்பட்ட வெற்றிலை 13-ஆம் மாதம் முதல் 36 மாதம் வரை சாகுபடி கிடைக்கும்.

நல்ல விளைச்சல் குறைந்தது 12 மாதம் முதல் அதிகபட்சம் 24 மாதம் வரை சாகுபடி கிடைக்கும். அதற்குள் புயல், மழை போன்ற இயற்கை சீற்றங்கள் வந்தால் மொத்த பயிரும் வீணாகும். ஏனைய விவசாய பயிர்கள் இயற்கை சீற்றம் ஏற்படும்போது குறிப்பிட்ட அளவு மட்டும் சேதமாகும். ஆனால், வெற்றிலை பயிர்களை மூங்கில் கழிகளைக் கொண்டு உட்டம் கட்டுவதால் ஒட்டுமொத்தமாய் சாய்ந்து சேதத்தை ஏற்படுத்தும்.

இது குறித்து வெற்றிலை விவசாயி ஒருவர் கூறியதாவது: கருகல் நோய், வாடல் நோய், இயற்கை சீற்றங்களால் வெற்றிலை பயிர் பாதிக்கப்பட்டால், அதனை பயிரிட்ட விவசாயிகளுக்கு அரசு நஷ்ட ஈடு வழங்கவேண்டும்.

மனித உழைப்பு அதிகமாக தேவைப்படும் வெற்றிலை விவசாயத்தில் நூறு நாள் பணியாளர்களை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். உரம் மற்றும் பூச்சி மருந்துகளை அரசு மானிய விலையில் வழங்க வேண்டும். ஏனைய விவசாய பயிர்களுக்கு பல்வேறு சலுகைகள், மானியங்கள், விவசாய இடு பொருள்கள் வழங்குவது போல், வெற்றிலை பயிருக்கும் அவற்றை வழங்க வேண்டும் என்றார்.

மாதனூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் யோகானந்தம் கூறுகையில், வெற்றிலை பயிரை தாக்கும் வாடல், கருகல் நோய்க்கு எமிசான் என்ற மருந்தை தெளிக்க வேண்டும். வெற்றிலை பயிருக்கு மானியம் வழங்கும் எந்த திட்டமும் நடைமுறையில் இல்லை' என்றார். வாடல், கருகல் போன்ற நோய் காரணமாக வெற்றிலை விவசாயம் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வெற்றிலையின் விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு வெற்றிலை அதிகபட்சமாக 50 பைசாவுக்கு விற்கப்படுகிறது. விசேஷ நாள்களில் விலை மேலும் உயர்கிறது.

எனவே, வாடல், கருகல் நோய்க்கான மருந்தை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கவும், மற்ற பயிர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வெற்றிலை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்ற இரு

கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டால், விவசாயிகள் வாழ்வு ஒளிமயமாவதோடு, வெற்றிலையின் விலையும் குறைந்து பொதுமக்களும் பயன்பெறுவர்.

** வெற்றிலை பயிருக்கு மானியம் வழங்கும் எந்த திட்டமும் நடைமுறையில் இல்லை' வாடல், கருகல் போன்ற நோய் காரணமாக வெற்றிலை விவசாயம் தற்போது கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது.

**பருவமழை ஏமாற்றம் விவசாயிகள் பயிர்காப்பீடு செய்ய வேண்டுகோள்**



வடகிழக்குப் பருவமழை பொய்த்துவருவதால், விவசாயம் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் பயிர்க்காப்பீடு செய்ய முன்வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தோவாளை வட்டம், தடிக்காரன்கோணத்தில் மனு நீதிநாள் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் சோ. இளங்கோ தலைமை வகித்து, 25 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:தமிழக அரசு வெகு விரைவில் ஸ்மார்ட் கார்டு மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருள்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. எனவே, இதுவரை ரேஷன் கடைகளில் தங்களது ஆதார் எண்ணை இணைக்காத குடும்ப அட்டைதாரர்கள் உடனடியாக ஆதார் எண்ணை பதிவு செய்ய வேண்டும். வடகிழக்கு பருவமழையை பொருத்தவரை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது மிகவும் குறைவாகவே மழை பெய்துள்ளது. இதனால், விவசாயம் பாதிக்க வாய்ப்புள்ளது. ஆகவே, விவசாயிகள் அனைவரும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டும் என்றார் அவர்.

முகாமில், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 12 பேருக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகையும், 3 பேருக்கு இந்திராகாந்தி தேசிய விதவை உதவி தொகையும், 4 பேருக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையும், கணவரால் கைவிடப்பட்ட ஒருவருக்கு உதவித்தொகையும், 5 பெண்களுக்கு விதவை உதவித்தொகையும் ஆக 25 பேர் மாதந்தோறும் தலா ரூ.1000 உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளும், 10 பேருக்கு புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டன.

முதற்கட்ட முகாமில் பெறப்பட்ட 120 கோரிக்கை மனுக்களில் 41 தகுதியான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த மனுக்கள் மீதான பதில்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு தெரிவித்தனர். இதில், சுகாதாரத்துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண் துறை சார்பில் கண்காட்சியும் இடம்பெற்றிருந்தது. நிகழ்ச்சியில், நாகர்கோவில் கோட்டாட்சியர் ராஜ்குமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நிஜாமுதீன், வேளாண் துறை இணை இயக்குநர் இளங்கோ உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

மேட்டூர் அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக மழையில்லாததால் அணைக்கு நீர்வரத்து படிப்படியாகக் குறைந்து வந்தது. இந்த நிலையில், கடந்த இரு நாள்களாக அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளிலும், காவிரியின் துணை நதிகளான பாலாறு, சின்னாறு பகுதிகளிலும் லேசான மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை நொடிக்கு 464 கன அடியாக இருந்தது, வியாழக்கிழமை காலை நொடிக்கு 1,241 கன அடியாக அதிகரித்துள்ளது.



அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 40.97 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 12.59 டி.எம்.சி.

**நன்னீர் மீன் வளர்ப்புக்கு விண்ணப்பிக்கலாம்**

மத்திய அரசின் மீன்வள மேலாண்மை மற்றும் நீலப்புரட்சி திட்டத்தின் கீழ், நன்னீர் மீன், உவர் நீர் இறால் வளர்ப்புக்கு ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என நாகை மாவட்ட ஆட்சியர் சு. பழனிசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி, மீன்வள மேலாண்மை மற்றும்

நீலப்புரட்சி திட்டத்தின் கீழ், மீன்வளர்ப்பில் ஆர்வமுள்ளவர்களுக்கு தகுதி அடிப்படையில், நன்னீர் மீன் வளர்ப்பு, உவர் நீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ், மீன் வளர்ப்பு குளங்கள், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், தொட்டிகள் சீரமைத்தல், புதுப்பித்தல் உள்ளிட்டவைகளுக்கு (உரிய ஒதுக்கீடுப்படி) 50 சதவீத மானியம் வழங்கப்படும். இதைத் தவிர, மீன்வளர்ப்பு இடுபொருள்களுக்கும் 50 சதவீத மானியம் அனுமதிக்கப்படுகிறது.



திட்டத்தில் பயன் பெற விருப்பமுள்ளவர்கள், நாகை மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகம் அல்லது சீர்காழியில் உள்ள மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தைத்

தொடர்பு கொண்டு, உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என்றார்.

**புகையான் பூச்சித் தாக்குதலில் இருந்து நெற்பயிரை காப்பாற்ற...!**

திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போதையப் பருவத்தில் புகையான் பூச்சி தாக்குதல் அதிகரித்து வருவதால் அதிலிருந்து நெற்பயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள கீழ்கண்ட வழிமுறைகளை விவசாயிகள் கடைப்பிடிக்க வேண்டும் என திரூர் வேளாண் அறிவியல் நிலைய பூச்சியியல் துறை திட்ட ஒருங்கிணைப்பாளர் சுமதி அறிவுறுத்தியுள்ளார். திருவள்ளூர் மாவட்டத்தில் பாண்டேஸ்வரம், ஆலத்தூர், கீழ்கொண்டையார் மற்றும் அருக்கம்பாக்கம் ஆகிய கிராமங்களில் நெற்பயிரை புகையான் பூச்சி தாக்கி அதிக சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் அப்பகுதி விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.



சேத அறிகுறி: பூச்சிகள் தூர்களின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் பயிர் மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் பழுப்பு நிறமாக மாறும். இது தத்துப்பூச்சி எரிப்பு எனப்படும். பாதிக்கப்பட்ட வயல் ஆங்காங்கே வட்ட வட்டமாகப் புகைந்தது போலக் காணப்படும்.

பொருளாதார சேத நிலை: தூருக்கு ஒரு பூச்சி, தூரில் சிலந்தி காணப்பட்டால் தூருக்கு 2 பூச்சிகள் என பொருளாதார சேதம் ஏற்படும்.

மேலாண்மை முறைகள்: நடவு வயலில் 8 அடிக்கு ஒரு அடி இடைவெளி விட்டு பத்தி நடவு செய்தல். மண் பரிசோதனை பரிந்துரைப்படி தழைச்சத்து இடும்பொழுது 3-4 முறையாகப் பிரித்து இடவேண்டும். களைச் செடிகளை அகற்றி விட வேண்டும்.

புகையான் பூச்சி தாக்குதலுக்கு எதிர்ப்புத் திறன், தாங்கும் திறன் கொண்ட ரகங்களான ஏடிடீ 36, ஏடிடீ 37, கோ42, பிஒய் 3 ஆகிய ரகங்களைப் பயிரிடலாம்.

விளக்குப் பொறி அமைத்து தாய்ப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து அழிக்கலாம்.

மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகளை ஹெக்டேருக்கு 12 என்ற அளவில் அமைக்கலாம். வயலில் புகையானின் இயற்கை விரோதிகளான சிலந்தி, பச்சை மிரிட் நாவாய்ப்பூச்சி, புள்ளி வண்டு, தட்டான், ஊசித் தட்டான் போன்ற இரை விழுங்கிகளும், அனேக்ரஸ், ஒலிகோசிட்டா போன்ற முட்டை ஒட்டுண்ணிகளும் இப்பூச்சியைப் பெரும் அளவில் கட்டுப்படுத்துகின்றன.

பொருளாதார சேத நிலையை எட்டியவுடன் கீழ்க்கண்ட பூச்சிக் கொல்லிகளுள் ஏதேனும் ஒன்றை ஒரு ஹெக்டேருக்கு தௌõக்க வேண்டும். குளோரன்டிரினிலிப்ரோல் 18.5 எஸ்சி-150 மிலி. இமிடாகுளோபிரிட் 17.8 எஸ் எல் - 100 மிலி, பயூப்ரோபெசின் 25 எஸ்.சி -800 மிலிடைகுளோர்வாஸ் 76 எஸ்.சி 625 மிலி அசிப்பேட் 76 எஸ்.பி. -625 கிடிரைஅசோபாஸ் -40 இசி- 625 மிலி இட வேண்டும். புகையானின் மறு உற்பத்தியைப் பெருக்கும் மிதைல் பாரத்தியான் மற்றும் செயற்கை பைரித்ராய்டு மருந்துகளைத் தௌõக்கக் கூடாது என்றார்.

பாசியைக் கட்டுப்படுத்த...:

மேலும், நெல் வயலில் பாசியைக் கட்டுப்படுத்த காப்பர் சல்பேட் ஒரு கிலோ வீதம் ஒரு ஏக்கருக்கு இடவேண்டும் என அறிவியல் நிலைய மரபியல் துறை உதவி பேராசிரியர் அ.மணிமாறன் அறிவுறுத்தியுள்ளார்.